Fire accidents

*412—*Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. th Minister for Finance be pleased to state :

(*a*) whether a disastrous fire broke out on 14th of July 1968 on Varaganeri, a suburb of Tiruchirappalli ;

(*b*) whether due to this fire, six persons were charred to death and six others suffered serious burns ;

(*c*) the number of huts and homes gutted ; and

(*d*) the total loss sustained by the fire ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:

(அ) ஆம்.

(இ) 4 பெண்கள், 3 குழந்தைகள்.

(உ) 347.

(எ) 2 லட்சம்.

திரு. கே. விநாயகம் : தீ விபத்து ஏற்படுவதற்குக் காரணம் என்ன? இதற்குக் காரணமாக இருந்தவர்கள் யாராவது கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா ? இனிமேலாவது தீ பிடிக்காமல் பார்த்துக் கொள்ள முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: விபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. தீ விபத்துகள் ஏற்படாமல் இருப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அற்புதமான யோசனை சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள அரசு தயாராய் இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா: திருச்சியிலே தீ விபத்திலே உயிர் இழந்தவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா ? தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 80 ரூபாய் கொடுப்பதை 100 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தீ விபத்திலே பாதிக்கப்பட்ட 128 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 80 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. 110 குடும்பங்களுக்கு துணி மணிகளுக்காக 20 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது உயிர் இழந்தவர்களுக்குத் பிரைம் மினிஸ்டர் பண்டிலிருந்து கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதை கவர்னர் அவர்கள் கொடுக்கவேண்டும். கவர்னர் அவர்கள் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான் என்று கவர்னர் அவர்களுடைய பிரைவேட் செகரடரிக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. டி. மார்டின்: விஞ்ஞான மேதை திரு ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தை அரசுக்குக் கொடுத்திருக்கிறாரா? அந்தத் திட்டத்தின்படி வராகனேரி பகுதியில் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு மார்டின் அவர்கள் எப்போதும் மூலக் கேள்வியை விட்டுவிட்டே துணைக் கேள்விகள் கேட்கிறார்கள்.

THIRU T. MARTIN : I am asking only with reference to this Varaganeri village.

விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு அவர்கள் குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்களா? அந்தத் திட்டத்தை அரசு ஏற்று திருச்சிராப்பள்ளியிலே தீ விபத்து நடந்த இடத்திலே குறைந்த செலவில் வீடு கட்ட இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். 128 குடும்பங்களுக்கு 80 ரூபாயும், 110 குடும்பங்களுக்குத் துணிமணியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடிசைகள் பாதிக்கப்படவில்லை. மீதி 109 குடும்பங்கள் எந்த விதமான உதவிக்கும் யோக்கியதாம்சங்களைப் பெறாததால் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்விக்கு அவசியம் ஏற்படவில்லை.

திரு. அ. மாரிமுத்து: மாநில மாவட்டத் தலைநகரிலே ஏற்படும் தீ விபத்துக்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருந்து நிதியைக் கேட்டுப் பெற்று வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அதைப் போன்று கிராமப் புறங்களில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏன் உதவி செய்யப்படுவதில்லை?

(பதில் இல்லை).

Thiru K. VINAYAKAM: Is it not a fact that the number of fire accidents have been on the increase after the present party came into power. How do these figures compare with the pre-D.M.K. Ministry ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதற்குரிய காரணம் அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தக் காரணம் தெரிந்திருந்தால் அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வசதியாக இருக்கும்.

*413—*Q.*—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether any relief has been given by the Government to the villagers of Kottangadu in Udangudi Panchayat in Tiruchendur taluk in Tirunelveli district who have lost their houses and belongings in the fire accident in the month of July 1968 ; and

(*b*) If so, the particulars thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) இத்தீவிபத்திற்குள்ளான 105 பேர் தங்கள் வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 60 வீதம் ரூ. 6,300 ரொக்க மானியமும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 20 வீதம் ரூ. 2,100 உடை மானியமும் வழங்கப்பட்டன.

திரு. டி. மார்டின்: நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலூகாவில் பனை ஓலைகளால் வேய்ந்த கூரைகள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, இந்தப் பகுதியில் தீ பிடித்த நேரத்தில் 40 மைல் தூரத்தில் இருந்து அதாவது தூத்துக்குடியில் இருந்து ஃபயர் சர்வீஸ் ஆட்கள் வந்து தீயை அணைக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆகவே, திருச்செந்தூரிலோ, உடன்குடியிலோ அல்லது திசையன்விளையிலோ ஒரு ஃபயர் பிரிகேட் ஆபீசைத் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வியாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியில் இருக்கும் யோசனையை அரசாங்கம் பரிசிலனை செய்யலாம்.

திரு. சோ. அழகர்சாமி: சமீபத்தில் சென்னையிலே கிருஷ்ணம்பேட்டை பகுதியிலே தீ விபத்து ஏற்பட்ட நேரத்திலே ஒவ்வொரு குடும்பத்திற்கும் 200 ரூபாய் கொடுத்ததோடு 80 ரூபாய் வீடு கட்டுவதற்கும் கொடுக்கப்பட்டது. மற்ற இடங்களுக்கும் அதேமாதிரி உதவி கொடுக்க அரசு முன்வருமா?